Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO. 231/2020

**Depostitions of PW- 1 Witness for**

| | |
|---|---|
| Name | காமராஜ் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of January 2024.

Signature of Witness.

<u>09.01.2024</u>

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் தற்போது மம்சாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். மம்சாபுரத்தில் மாரியம்மன் கோவில் கீழரத வீதியின் அரிசி கடை வைத்து நடத்தி வருகிறேன். 26.12.2019 அன்று மதியம் 1.30 மணியளவில் நான் எனது கடையில் இருந்து வீட்டிற்கு சாப்பிட போனேன். கடையை பூட்டி விட்டு சாவியை எனது கையோடு எடுத்துக்கொண்டு சென்றேன். பின்னர் சாப்பிட்டுவிட்டு கடைக்கு வந்து பார்த்தபோது எனது கடைக்குள் சில்லரை சிதறிக்கிடந்தது. கல்லாப்பெட்டியின் பூட்டு உடைந்துகிடந்தது. அதில் நான் வைத்திருந்த .ரூ. 1,00,000/- பணம்

காணாமல் போயிருந்தது. நான் அக்கம் பக்கத்தில் பணம் காணாமல் போனது சம்மந்தமாக விசாரித்தேன். பணம் கிடைக்காததால் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும்புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 4 நாட்கள் கழித்து போலீசார் பணத்தினை திருடிய நபரை பிடித்துவிட்டதாக சொல்லி என்னை காவல் நிலையம் வரச்சொன்னார்கள். நான் அங்கு சென்றேன் என்னை விசாரித்தார்கள். அந்த பணத்தினை யார் எடுத்ததென்று என்னிடம் சொல்லவில்லை. நான் என்னுடைய பணம் ரூ.1,00,000/– ஐ நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து திரும்பப் பெற்று விட்டேன். புகார் மனு அ.சா,.ஆ. 1 ஆகவும், பணம் ரூ. 1,00,000/– அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளபணத்தினை நான் திரும்ப பெற்றுக்கொண்டேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.